

உ
சிவமயம்

# கீரிமலை சிவன்கோயில் அறக்கட்டளை (U.K.)

# KEERIMALAI SIVAN KOVIL TRUST (U.K.)

## கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் திருப்பணிகளுக்காக



## ஸ்ரீரங்கநாதன் தர்ஷனன் அவர்களின் இசைக்கச்சேரி

## 04-04-2009 -சனிக்கிழமை

ஸ்ரீரங்கநாதன் தர்ஷனன் ஈழத்தின் புகழ்பெற்ற இளம் இசைக்கலைஞர். யாழ் பல்கலைக்கழகத்தில் இசைவிரிவுரையாளராக பணியாற்றும் இவர் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் இசையைப் பயின்றவர்.
இவருடைய இசைக் கச்சேரி
ஈழத்தின் வடபால் கீரிமலையில் மூர்த்தி தலம் தீர்த்தம் விருட்சம் எனும் சிறப்புக்களுடன் அருளாட்சி புரியும்
ஸ்ரீ நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப்பெருமானின் ஆலயத் திருப்பணிகளுக்காக நடாத்தப்படுகின்றது.

**இடம்: இலண்டன் சிவன் கோயில் சிவன் மண்டபம்**
**4 A Clarendon Rise , Lewshiam , London SE13 5ES**
**Tel: 020 8318 9844**

காலம்: 04-04-2009 சனிக்கிழமை
மாலை 6.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை

## ADMISSION

**Reserved: £25**
**Adult: £10**
**Under18: £5**

**Contacts:**

| | | | |
|---|---|---|---|
| Dr. Nava: | 01277 223981 | Dr.Sivakumar: | 0208 468 7181 |
| Ram: | 07956 369 557 | Thamboo: | 07861 393 295 |

உ
சிவமயம்

# “ஓங்குபுகழ் நகுலேச நற்பணி புரிவோர்க்கு, தீங்கொன்றும் வாராது திடமா யிருமனமே”

ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்று நகுலேஸ்வரம். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று அம்சங்களும் அமையப்பெற்று யாழ் குடாநாட்டின் தலைசிறந்த சிவஸ்தலமாக யுகம் யுகமாக விளங்கி வருகின்றது. நகுலமுனிவர் பல்லாண்டு காலம் இங்கு தீர்த்தமாடித் தவஞ்செய்து தனது கீரிமுகத்தை மாற்றிக்கொண்டார் அதனால், அப்புண்ணிய ஸ்தலம் கீரிமலை என்றும் நகுலேஸ்வரம் என்றும் பெயர் பெற்றது. மாருதப்புரவீகவல்லி என்ற சோழ இளவரசி இங்கு தீர்த்தமாடித் தன் குதிரை முகத்தை மாற்றிக் கொண்டு நன்றிக்கடனாக, கீரிமலைக்கு அருகில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலை நிர்மாணித்தார். இன்றும் மாவைக் கந்தன், ஆடி அமாவாசையன்று இங்கு நீராடப் பவனி வருவார்.

1990ஆம் ஆண்டு கடுமையான விமானக் குண்டுத்தாக்குதலினால் ஆலயம் பெருஞ்சேதமடைந்தது. எனினும் 1998ஆம் ஆண்டு, ஆலயநிர்வாகம் கோயிலை மீண்டும் காலத்திற்கேற்றவாறும் சிற்பசாஸ்திர முறைப்படியும் கட்டியெழுப்ப வேண்டுமென்ற திடசங்கற்பத்துடன் புனருத்தாருண வேலைகளை ஆரம்பித்து சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின் அயராத உழைப்பால் ஈழம் வாழ் அடியார்கள் உதவியோடும், வெளிநாடுகளில், குறிப்பாக பிரித்தானியாவில் வாழ்வோர் உதவியோடும் கட்டடவேலைகள் பூர்த்தி அடையும் நிலையில் உள்ளன. இராஜகோபுரம் இல்லாத குறையை நீக்க அதற்கான வேலைகளும் ஆரம்பமாகிவிட்டன. கோயிலின் பூர்விகப் பொலிவையும் பெரிய அமைப்பையும் பிரதிபலிக்கும் வண்ணம் 108 அடி உயரமும் ஏழு தளங்களும் கொண்ட இராஜகோபுரம் அமைப்பதற்கு ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியில், 1989ஆம் ஆண்டு சிவஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கீரிமலை சிவன் கோயில் அறக்கட்டளை (பிரித்தானியா) பெரும் பங்கு வகிக்கின்றது. இந்த முயற்சியில் ஈராண்டுகளுக்கு முன்னர் ஓர் ஒலிப்பேழையும் வெளியிடப்பட்டது.

ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி இலண்டன் சிவன் கோயில் மண்டபத்தில்
ஆலயத்திருப்பணிக்காக ஈழத்து இளம் இசைக்கலைஞர்
திரு ஸ்ரீரங்கநாதன் தர்ஷனன் அவர்களின் இசைக்கச்சேரி நடைபெறுகிறது.



ஆலயத்திருப்பணிக்கு அள்ளித்தருமாறு
அன்புடன் வேண்டுகிறோம்

